SRI A. VEDARATHNAM : இப்பொழுதுள்ள அதிகாரிகளி லிருந்தே ப்ரொமோஷன் கொடுக்கப்பட்டு இந்த உத்தியோகங் களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்களா அல்லது புதியதாக நியமிக்கப்படுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ப்ரொமோஷன் மூலமாக வருவதுதான். புதியதாக வருவது இல்லே.

SRI S. RANGANATHA MUDALIAR : What grade of officers are appointed as Personal Assistants (Planning and Development) to Collectors?

THE HON. SRI C. SUBRAMANIAM : Just now I stated that Deputy Collectors and junior I.A.S. officers also are appointed for those posts.

SRI K. VINAYAKAM : What is the position obtaining in the City of Madras in this respect when no kind of planning is done by the Collector of Madras?

THE HON. SRI C. SUBRAMANIAM : It won't apply to the City of Madras where we do not have a Panchayat Union.

SRI T. SAMPATH : இந்த உத்தியோகங்கள் எத்தனே காலத் திற்கு இருக்கும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வேலே இருக்கிற வரைக்கும். இப்போதைக்கு ஒரு வருஷத்திற்கு இருக்கும். அதன் பிறகு அதைப்பற்றி புனராலோசனே செய்யப்படும்.

Washermen and Barbers

*156 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) சர்க்கார் உத்திரவு எண் 1953 (Harijan Welfare), தேதி 9—6—1960-ன்படி சலவைத் தொழிலாளி, க்ஷவரத் தொழிலாளி, களுக்குத் (?) தரப்படுகின்ற உதவிகள் மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா?

(ஆ) அப்படியானுல், எப்போது ?

THE HON. SRI P. KAKKAN : (a) and (b) The scheme is implemented in Salem district in the first instance. The question of extending it to other districts next year will be considered in due course after watching the results achieved in Salem district.

SRI S. M. ANNAMALAI : இந்த சலவைத் தொழிலாளர் களுக்கும், க்ஷவரத் தொழிலாளர்களுக்கும் என்ன சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

THE HON. SRI P. KAKKAN : சலூன் வைத்துள்ளவர்களுக்கு ஒரு சலூனுக்கு ரூ. 250 வீதம் கொடுக்கப்படுகிறது. சலவைத்

18th August 1960]

தொழிலாளர்கள் லாண்டரி வைத்திருந்தால் ஒரு லாண்டரிக்கு ரூ. 150 விதம் கொடுக்கப்படுகிறது. டெயிலரிங் ஷாப் வைத்து நடத்துகிறவர்களுக்கு ரூ. 400 கொடுக்கப்படுகிறது.

Burning ghats

* 169 *Q.*—SRI P. G. MANICKAM : *கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—*

கோயமுத்தூர் ஜில்லா, பவானி தாலூகாவிலுள்ள ஹரிஜனக் காலனிகளில் எத்தனை காலனிகளிலுள்ள ஹரிஜனங்களுக்கு சுடுகாட்டுக்காக இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : Nil. Proposals are, however, under examination.

SRI P. G. MANICKAM : பவானி தாலூகாவில் ஏறக்குறைய 39 ஹரிஜன காலனிகளுக்கு சுடுகாடுகள் தேவை என்று சர்க்காருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற மாகாண வெல்பேர் கமிட்டிக் கூட்டத்தில் இதைப்பற்றி முடிவு செய்து சர்க்காருக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி கலெக்டருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்பற்றி மாகாண வெல்பேர் கமிட்டியின் மூலமும் சர்க் காருக்கும் கலெக்டருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இந்த மாதம் 19 கேஸ்களில் வீடுகள் கட்டுவதற்கும் மயானங்கள் அமைப்பதற்கு நிலம் வாங்கவும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அதைப்பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைத் தவிர நான்கு இடங்களில் அதாவது பெரிய வடமலைபாளையம், ஹாம்லட் ஆப் ஜெம்பை, சித்தரிப்புத்தோப்பு, தவிட்டுப்பாளையம், ஹாம்லட் ஆப் ஆண்டியூர், ராசன்குளம், ஹாம்லட் ஆப் கெட்டி சமுத்ரம் ஆக நான்கு இடங்களிலும் மயானத்திற்கு என்று இடத்தை 'அக்வயர்' செய்ய தக்க நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI N. MARUDACHALAM : ஹரிஜனங்களுக்கு என்று தனியாக மயானம் இருப்பதைக் காட்டிலும் ஜாதி ஹிந்துக் களுக்கு என்று இருக்கக்கூடிய மயானத்திலேயே ஹரிஜன பிணங் களையும் புதைக்க சர்க்கார் தக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது சர்க்கார் எப்படி உத்தரவிட்டிருக்கிறார்கள் என்றால், ஏற்கனவே ஒரு மயானம் பொதுப் பணத்திலிருந்து ஒதுக்கி அது மக்களுக்குப் பயன்படு மானால் அந்த இடத்தில் ஹரிஜனங்களுக்கு எந்த விதமான